<u>(சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>

**ஓ.எஸ்.எண்.101/2022** **நாள்.13.03.2024**

2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 13 நாள் வாதி தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருள் | தொழில் | |
| த. பெ./க.பெ. | ஜெயராமன் | சாதி | |
| கிராமம் | அவியூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 49 |

**<u>வ.சா.2</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

I. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லி அதன் பின்பு தயார் செய்தார்கள். வழக்கு விவரங்களை வாதி எனக்கு சொன்னார். வழக்கு விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும் என்று சொல்லியுள்ளது உண்மையில்லை என்றால் சரியல்ல. வழக்கு பாகம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வேறு பரிகாரம் கோரியுள்ளார்களா என்று எனக்கு தெரியாது. எனக்கு தற்போது 49 வயதாகிறது. சிவலிங்கம் சொத்தை எந்த ஆண்டு வாங்கினார் என்று எனக்கு தெரியாது. சிவலிங்கம் 25.03.1997 ல் 18.08.1997 ல் அவர் பெயரில் கிரையம் வாங்கினார் என்றால் பூர்வீக சொத்தை விற்று சிவலிங்கம் அவர் பெயரில் சொத்துக்களை கிரையம் வாங்கினார். மேற்படி கிரையம் வாங்கிய போது எனக்கு 21 வயது தான் இருக்கும் என்றாலும் அதனால் சிவலிங்கம் கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி சிவலிங்கம் வாங்கிய மேற்படி கிரைய ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சிவலிங்கத்திற்கு முன்னின்று சொத்துக்களை கிரையம் வாங்கி கொடுத்ததாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது உண்மையில்லை என்றால் சரியல்ல. வாதி கேட்டுக்கொண்டதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பாகம் பிரியாத பொது குடும்ப சொத்துக்கள் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பாகம் பிரியாத பொது குடும்ப சொத்து என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

II. சிவலிங்கம் சென்ற வருடம் இறந்துவிட்டார். சிவலிங்கம் இறப்பதற்கு 6 வருடங்களுக்கு 30.01.2015 தேதியில் அவரின் மனைவிக்கு தான பத்திரம் மூலம் வழக்கு சொத்துக்களை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் தற்போது சிவலிங்கத்தின் மனைவிக்கு உரிமையானது என்றாலும் அதனால் வாதி பாகம் கோர முடியாது என்றால் சரியல்ல. பாக பிரிவினை சம்மந்தமாக பஞ்சாயத்து நடந்தது. 10 ஆண்டுகளுக்கு முன்பு பஞ்சாயத்து நடந்தது. தேதி ஞாபகம் இல்லை. 2006 யிலிருந்து 2011 வரை சிவலிங்கம் பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றாலும் , அப்போது ஏற்பட்ட பிரச்சனையினால் சிவலிங்கம் ஊருக்கு வரவில்லை என்றாலும் ஆகவே பஞ்சாயத்து நடந்ததாக சொல்லுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. சிவலிங்கத்திற்கு ஊரில் வீடு கிடையாது என்றாலும் அதனால் அவர் ஊருக்கு வருவது இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்லுவது போல் பஞ்சாயத்து எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. மகசூல் வருமானத்தில் இருந்து சிவலிங்கம் சொத்துக்களை வாங்கினார் என்று நான் சொல்லியுள்ளது உண்மையில்லை என்றாலும் அவர் சென்னையில் பாத்திர வியாபாரத்தின் மூலம் வந்த வருமானத்தை கொண்டு தான் அவர் பெயரில் சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. சென்னையில் உள்ள வீடு வாதி சம்பாதித்து கொடுத்த பணத்தை கொண்டு சிவலிங்கம் பெயரில் கிரையம் வாங்கியதாகும். சென்னையில் உள்ள வீடு குடிசை மாற்று வாரியத்தால் சிவலிங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றாலும் அது கிரையம் வாங்கியது இல்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.